முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2020 யூலை

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2020-10-03
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிலைபேற்று அறிக்கை (Sustainability report) மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கை (Integrated report) ஆகியன ஆண்டறிக்கையின் பகுதிகளாக அமைவதுடன் நிலைபேற்று அறிக்கை பிரதானமாக நிதிசாராத தரவுகளையும் ஒருங்கிணைந்த அறிக்கை நிதிசார் மற்றும் நிதிசாராத தரவுகளையும் கொண்டிருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிலைபேற்று அறிக்கையின் பிரதான நோக்கத்தினைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையொன்றின் பிரதான ஆக்கக்கூறுகள் (components) இரண்டினை (02) **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

பல ஆண்டுகளாக, மாற்றமடைந்துவரும் சூழலுடன் கணக்கியற் தொழிற்றுறையும் மாற்றமடைந்து வருகின்றது. எனவே, தொழில்சார் அமைப்புக்களும் அவற்றின் அங்கத்தவர்களும் தொழிற்றுறையின் இருப்பு மற்றும் அபிவிருத்திக்கான சவால்களுக்கு பதிலிறுக்க வேண்டியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

கணக்கியற் தொழிற்றுறை முகங்கொடுக்கும் மூன்று (03) சவால்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

உரிமமொன்று பொதுநோக்கு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்னிலைப்படுத்துவதில் LKAS 01 – நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் நியமத்தைப் பிரயோகிக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) சொத்தொன்றினை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்துவதற்கு மூன்று (03) தேர்வு நிபந்தனைகளைக் (criteria) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) பிற முற்றடக்க வருமானத்தில் உள்ளடக்கப்படும் இரண்டு (02) ஆக்கக்கூறுகளை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

(a) LKAS 36 – சொத்துக்களின் சேத இழப்பு (impairment) நியமத்தின்படி, ஒரு சொத்து சேத இழப்பு அடைந்திருக்கக்கூடும் என்பதற்கு காட்டிகள் (indications) உள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

LKAS 36 இன்படி, ஒரு சொத்து சேத இழப்பு அடைந்திருக்கக்கூடும் என்பதை இனங்காண்பதற்கு இரண்டு (02) காட்டிகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) கம்பனியொன்றினது எந்திரத்தின் கிரயம் ரூபா 6 மில்லியனாகவும் 2020 மார்ச் 31 இல் இந்த எந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி ரூபா 3.5 மில்லியனாகவும் காணப்பட்டது. 2020 மார்ச் 31 இல் கம்பனி சேத இழப்புச் சோதனையை மேற்கொண்டதுடன், சீர்மதிப்பிலிருந்து விற்பனைக் கிரயத்தைக் கழித்த பெறுமதியும் எந்திரத்தின் பயன்பாட்டுப் பெறுமதியும் முறையே ரூபா 2 மில்லியனாகவும் ரூபா 2.5 மில்லியனாகவும் காணப்படுவது கண்டறியப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எந்திரத்தின் சேதஇழப்பு நட்டத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட றோயல் (தனி.) கம்பனியின்** 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளின்படியான நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**வரையறுக்கப்பட்ட றோயல் (தனி.) கம்பனி**
**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 | 2020 | 2019 |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 4,205 | 3,838 |
| திரள் தேய்மானம் | (2,090) | (1,810) |
| **முன்கொணரற் பெறுமதி** | **2,115** | **2,028** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 1,320 | 920 |
| வியாபார வருமதிகள் | 1,723 | 1,905 |
| காசும் காசுச் சமானங்களும் | 397 | 457 |
| | **3,440** | **3,282** |
| **மொத்தச் சொத்துக்கள்:** | **5,555** | **5,310** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் | 1,000 | 1,000 |
| கைக்கொள் இலாபம் | 960 | 820 |
| | **1,960** | **1,820** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| நீண்டகாலக் கடன்கள் | 1,300 | 1,200 |
| | **1,300** | **1,200** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| குறுங்காலக் கடன்கள் | 200 | 150 |
| வியாபார சென்மதிகள் | 1,695 | 1,590 |
| கடன்கள்மீது செலுத்த வேண்டிய வட்டி | 180 | 100 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 220 | 450 |
| | **2,295** | **2,290** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **5,555** | **5,310** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானவரிச் செலவு ரூபா 205,000/-.

(2) 2020 மார்ச் 31 இல் மோட்டார் வாகனமொன்று ரூபா 1,800,000/- க்கு கம்பனியால் விற்பனை செய்யப்பட்டது. அந்த வாகனத்தின் கிரயமும், 2020 மார்ச் 31 இல் திரள் தேய்மானமும் முறையே ரூபா 2,500,000/- மற்றும் ரூபா 1,250,000/- ஆகும். மேலும், கம்பனி அதே தினத்தில் மோட்டார் லொறி ஒன்றினைக் கொள்வனவு செய்தது.

(3) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கடன்கள் மீதான வட்டிச் செலவு ரூபா 295,000/-.

(4) ஆண்டின்போது அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபமாக ரூபா 100,000/- செலுத்தப்பட்டது.

(5) கம்பனி, ஆண்டின்போது ரூபா 800,000/- வங்கிக் கடனொன்றைப் பெற்றிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

<u>நேரில் முறையை (Indirect method)</u> பயன்படுத்தி 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு **வரையறுக்கப்பட்ட றோயல் (தனி.) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(a) **வரையறுக்கப்பட்ட டோக்கியோ ஓட்டோ (தனி.) கம்பனியானது (TAL)** இலங்கையில் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதிசெய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **TAL** கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2020 மே 20 இல் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டது:

கீழ்வரும் தகவல்கள் **TAL** தொடர்புபட்டவையாகும்:

(1) 2020 மார்ச் 31 இல் ரூபா 7 மில்லியன் செலுத்த வேண்டியிருந்த **TAL** இன் வாடிக்கையாளர் ஒருவர் 2020 ஏப்ரல் 30 இல் வங்குரோத்து நிலை அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். இது, **TAL** இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(2) **TAL** அதன் வழக்கமான நடைமுறையாக ஒவ்வொரு ஆண்டிலும் ரூபா 12 மில்லியனை வருடாந்த உபகாரக் கொடுப்பனவாகச் செலுத்தி வருகிறது. அதற்கிணங்க, 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபங்களிலிருந்து ஊழியர்களுக்கு வருடாந்த உபகாரக் கொடுப்பனவாக ரூபா 12 மில்லியனைச் செலுத்துவதற்கு **TAL** இன் பணிப்பாளர் சபை 2020 ஏப்ரல் 15 இல் அங்கீகாரம் வழங்கியிருந்தது. 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

LKAS 10 – அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பிந்திய நிகழ்வுகள் நியமத்திற்கு அமைவாக மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **TAL** இன் நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்படும் என **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **ஸீனா PLC** (குத்தகைக்குப் பெறுநர்) ஆனது 3 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி **ABC PLC** யுடன் (குத்தகைக்கு வழங்குநர்) குத்தகை உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொண்டது. குத்தகை உடன்படிக்கையின்படி, **ஸீனா PLC** குத்தகையின் ஆரம்பத்தில் ரூபா 400,000/- இனைச் செலுத்தியதுடன் எஞ்சிய தொகையானது, ரூபா 1,413,600/- என்ற வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணங்களாக ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 31 ஆந் திகதி செலுத்தப்பட வேண்டும். உள்ளார்ந்த வட்டி வீதம் 14% ஆகும். குத்தகை உடன்படிக்கையின்படி, குத்தகைக் கால முடிவில் மோட்டார் வாகனத்தின் உரிமை **ஸீனா PLC** க்கு மாற்றப்படும். (*குத்தகை வாடகை உரிய திகதியில் செலுத்தப்படுவதாகக் கொள்க.*)

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி ஊடுசெயல் தொடர்பாக குத்தகைக்குப் பெறுநரின் 2020 மார்ச் 31 ஆந் திகதியின்படியான, நிதி நிலைக் கூற்றின் பிரித்தெடுப்பினைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2020 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட P கம்பனியின்** கணக்கேடுகளில் இருந்து பிரித்தறியப்பட்டன:

(1) நடைமுறையல்லாச் சொத்துக்களின் விபரம் கீழ்வருமாறு: *(ரூபா '000)*

| சொத்து | கிரயம் | 2020 மார்ச் 31 இல் முன்கொணரற் பெறுமதி (கணக்கீட்டில் எழுதப்பட்ட பெறுமதி) | வரி நோக்கத்திற்காக திரள் தேய்மானம் (மூலதன விடுதொகை) |
|---|---|---|---|
| காணி | 10,000 | - | - |
| பொறி மற்றும் உபகரணம் | 40,000 | 32,500 | 16,300 |

(2) 2020 மார்ச் 31 இல் பணிக்கொடை ஏற்பாடு (provision for gratuity) ரூபா 12,000,000/-.

(3) 2019 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு ரூபா 810,000/-.

(4) **வரையறுக்கப்பட்ட P கம்பனி** ஆண்டிற்கு 14% வருமான வரி செலுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2020 மார்ச் 31 இல் தற்காலிக வித்தியாசங்களை (temporary differences) **இனங்காண்க.**
(06 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து/ பரிப்பினைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளில் / முடிவடைந்த ஆண்டுகளுக்கான **வ/ப டெல்டா கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

**முற்றடக்க வருமானக் கூற்றிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| ஆண்டு முடிவு | 2020 மார்ச் 31 |
|---|---|
| விற்பனை | 92,500 |
| விற்பனைக் கிரயம் | 62,900 |
| மொத்த இலாபம் | 29,600 |
| வட்டி மற்றும் வரிக்கு முன் இலாபம் | 10,700 |
| வட்டிச் செலவுகள் | 2,200 |
| வரிக்குப் பின் இலாபம் | 5,500 |

**நிதி நிலைக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **திகதியில்** | **2020 மார்ச் 31** | **2019 மார்ச் 31** |
|---|---|---|
| தொக்குகள் | 15,000 | 16,500 |
| வியாபார வருமதிகள் | 11,700 | 12,700 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 31,300 | 34,000 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 19,000 | 17,500 |
| உரிமையாண்மை | 16,500 | 11,000 |
| நீண்டகாலக் கடன்கள் | 4,500 | 6,000 |

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு **வ/ப டெல்டா கம்பனியின்** கீழ்வரும் விகிதங்கள் கணிக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மொத்த இலாப வீதம் | 30% |
| நிகர இலாப வீதம் | 10% |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 45 நாட்கள் |
| தொக்கு இருப்புக் காலம் | 85 நாட்கள் |
| நடப்பு விகிதம் | 1.94 : 1 |
| வட்டிக் காப்பு (interest cover) | 4 தடவைகள் |

சகல விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2020 மார்ச் 31 இல் /முடிவடைந்த ஆண்டிற்குக் கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக**:

(i) மொத்த இலாப வீதம்

(ii) நிகர இலாப வீதம்

(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(iv) தொக்கு இருப்புக் காலம்

(v) நடப்பு விகிதம்

(vi) வட்டிக் காப்பு (06 புள்ளிகள்)

(b) முன்னைய ஆண்டிற்குக் கணிக்கப்பட்ட விகிதங்களைக் கவனத்திற்கொண்டு, 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வ/ப டெல்டா கம்பனியின்** செயற்பாடுகளைப் **பகுப்பாய்வு செய்க.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

## வினா 09

2020 மார்ச் 31 இல் **சன் PLC** மற்றும் **மூன் PLC** ஆகிய கம்பனிகளின் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழ்வருமாறு:

**2020 மார்ச் 31 இல்**

**நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | சன் PLC | மூன் PLC |
|---|---|---|
| **சொத்துக்கள்:** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்:** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 80,000 | 42,000 |
| திரள் தேய்மானம் | (34,000) | (6,000) |
| முன்கொணரற் பெறுமதி | 46,000 | 36,000 |
| **மூன் PLC** யில் முதலீடு | 40,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 12,000 | 13,500 |
| வியாபார வருமதிகள் | 8,000 | 9,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,000 | 2,500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **108,000** | **61,000** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்:** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 70,000 | 40,000 |
| கைக்கொள் இலாபம் | 16,700 | 8,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்:** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 21,300 | 13,000 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **108,000** | **61,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 ஏப்ரல் 01 இல் **சன் PLC** ஆனது **மூன் PLC** யின் சாதாரண பங்கு மூலதனத்தின் 80% இனைக் கொள்வனவு செய்தது.

(2) கொள்வனவுத் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூபா 10 மில்லியன். கொள்வனவுத் திகதியில் **மூன் PLC** யின் கைக்கொள் இலாபம் ரூபா 5 மில்லியனாக இருந்ததுடன், **மூன் PLC** யின் இனங்காணத்தக்க நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அதன் ஏட்டுப் பெறுமதிக்குச் சமமாக இருந்தது.

(3) **சன் PLC** 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 4 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்த மோட்டார் வாகனமொன்றினை 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 5 மில்லியனுக்கு **மூன் PLC** யிற்கு விற்பனை செய்தது. இரண்டு கம்பனிகளும் அவற்றின் மோட்டார் வாகனங்களை 5 ஆண்டுகள் ஈறாக நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் தேய்மானம் செய்கின்றன.

(4) 2020 மார்ச் மாதத்தில் **மூன் PLC** ரூபா 3 மில்லியன் கிரயமான தொக்குகளைக் கிரயத்தில் 20% இலாபம் வைத்து **சன் PLC** க்கு விற்பனை செய்தது. அதில் 50% தொக்குகள் 2020 மார்ச் 31 இல் **சன் PLC** யின் பண்டகசாலையில் விற்பனை செய்யப்படாது தொக்குகளில் இருந்தன. மேலும், இந்த ஊடுசெயல் தொடர்பான முழுத் தொகையும் **மூன் PLC** மற்றும் **சன் PLC** யின் கணக்கேடுகளில் முறையே வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளாகப் பதிவு செய்யப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

(a) ஒன்றித்தலினால் ஏற்படும் நன்மதிப்பைக் (goodwill) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இல் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

(மொத்தம் 13 புள்ளிகள்)

## வினா 10

கீழே தரப்பட்டுள்ள பரீட்சை மீதி **வ/ப டியானா கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து 2020 மார்ச் 31 இல் பிரித்தறியப்பட்டது:

**வ/ப டியானா கம்பனி**

**2020 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (5,000,000 சாதாரண பங்குகள்) | | 50,000 |
| கைக்கொள் இலாபம் 2019 ஏப்ரல் 01 இல் | | 17,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்:** | | |
| காணியும் கட்டடமும் (காணியின் கிரயம் ரூபா 20 மில்லியன்) | 32,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 7,300 | |
| கணினி மென்பொருள் | 12,000 | |
| மூலதன புத்துருவாகும் வேலைகள் | 8,200 | |
| **திரள் தேய்மானம் - 2019 ஏப்ரல் 01 இல்:** | | |
| கட்டடங்கள் | | 4,800 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,200 |
| கணினி மென்பொருள் | | 3,000 |
| தொக்குகள் - 2020 மார்ச் 31 இல் | 39,400 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 28,100 | 29,100 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 10,700 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2019 ஏப்ரல் 01 இல் | | 3,400 |
| செலுத்திய வருமான வரி | 1,300 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்குகள் | 5,000 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 198,500 | 281,900 |
| ஏனைய வருமானம் | | 3,000 |
| 12% வங்கிக் கடன் | | 4,000 |
| 2019 ஏப்ரல் 01 இல் செலுத்த வேண்டிய வருமான வரி | | 750 |
| நிருவாகச் செலவுகள் | 30,350 | |
| விநியோகச் செலவுகள் | 23,400 | |
| நிதிச் செலவுகள் | 8,400 | |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | | 4,500 |
| | **404,650** | **404,650** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) 2020 மார்ச் 31 இல் இருந்த தொக்குகளில் ரூபா 800,000/- கிரயமான ஒரு பகுதி தொக்குகள் வழக்கிழந்து (obsolete) காணப்பட்டதுடன் இது 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி மேலதிக போக்குவரத்துச் செலவாக ரூபா 100,000/- செலவு செய்து ரூபா 400,000/- இற்கு விற்கப்பட்டது.

(2) 2019 அக்டோபர் 01 ஆந் திகதி, கம்பனி ரூபா 7,000,000/- க்கு புதிய கணினி மென்பொருள் ஒன்றினைக் கொள்வனவுசெய்ததுடன், அதனை கணினி மென்பொருள் கணக்கின்கீழ் பதிவுசெய்தது. அதே நாளில் அதனைத் தமது வியாபாரத்திற்குப் பொருந்தும் விதத்தில் விருத்தி செய்வதற்காக மேலும் ரூபா 2,000,000/- செலவுசெய்ய வேண்டியிருந்தது. கணினி மென்பொருளின் இந்த விருத்தியாக்கச் செலவானது, நிருவாகச் செலவில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(3) ஒரு புதிய கட்டடத்தை நிருமாணிப்பதற்காகக் கம்பனி 2019 யூன் 30 ஆந் திகதி ஆண்டிற்கு 12% வட்டி வீதத்திற்கு ரூபா 5 மில்லியன் வங்கிக் கடனொன்றைப் பெற்றதுடன் நிருமாணப் பணிகள் 2019 யூலை 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டன. 2020 மார்ச் 31 இல் கட்டட நிருமாணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்ததுடன், 2020 அக்டோபர் இறுதியில் நிருமாணம் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டின்போது கட்டட நிருமாணத்திற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை மூலதனப் புத்துருவாகும் வேலைக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது. ஆண்டிற்கான கடன் வட்டியான ரூபா 450,000/- ஆனது நிதிச் செலவுகள் கணக்கின்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2020 மார்ச் 31 இல் இருந்த வங்கிக் கடன் மீதியின் ¼ பங்கு அடுத்த ஆண்டின்போது செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.

(4) 2020 மார்ச் 31 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 23,700,000/- ஆக இருந்ததுடன் இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(5) தேய்மானமானது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் கணிக்கப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 50 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனம் | : | 04 ஆண்டுகள் |
| கணினி மென்பொருள் | : | 05 ஆண்டுகள் |

(6) முன்னைய ஆண்டில் அறவிடமுடியாததாக பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூபா 1,500,000/- இந்த ஆண்டின்போது கம்பனியால் அறவிடப்பட்டதுடன் இந்தத் தொகை வியாபார வருமதிகள் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது. மேலும், 2020 மார்ச் 31 இல் உள்ள வியாபார வருமதிகள் மீதியில் 10 % ஐயுறவுக் கடன் பொது ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(7) 2020 ஆம் ஆண்டின் முழுமையான நாட்காட்டி ஆண்டிற்கும் (calendar year) செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா 1,200,000/- நிருவாகச் செலவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்டது.

(8) 2020 மார்ச் 31 இல் கீழ்வரும் செலவுகள் அட்டுறுவாக்கப்பட வேண்டும்:

| | **ரூபா** |
|---|---|
| மின்சாரம் | 300,000 |
| நீர் | 150,000 |

(9) வரிமதிப்பாண்டு 2019/20 இற்கு மதிப்பிடப்பட்ட கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூபா 2,300,000/- ஆகும்.

(10) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2020 யூன் 05 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டது.

மேற்படி தகவல்களைக் கருத்திற்கொண்டு,

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பிரசுரிப்புக்கு ஏற்ற வகையில் **வரையறுக்கப்பட்ட டியானா கம்பனிக்கு** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(c) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |